செ.வெ.எண்: 25 / மார்ச் நாள்: 15.03.2016

# இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் இடைநிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான அரசு பொதுத்தேர்வினை மொத்தம் 18,106 மாணவ, மாணவியர்கள் எழுதுகின்றனர்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தேர்வு மையத்தினை ஆய்வு செய்து தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், பள்ளிக் கல்வித் துறையின் மூலம் இடைநிலைப்பள்ளி (பத்தாம் வகுப்பு ) மாணவ மாணவியர்களுக்கான அரசு பொதுத்தேர்வு நடைபெறும் தேர்வு மையமான நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (15.03.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:

தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையின் மூலம் இடைநிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கான அரசு பொதுத்தேர்வு இன்று (15.03.2016) தொடங்கி 13.04.2016 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்வினை, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் கல்வி மாவட்டத்தில் 4,965 மாணவர்களும், 5,421 மாணவிகளும், பரமக்குடி கல்வி மாவட்டத்தில் 3,836 மாணவர்களும், 3,884 மாணவிகளும் ஆக மொத்தம் 18,106 மாணவ, மாணவியர்கள் எழுதுகின்றனர். மேலும் 25 மாற்றுத்திறனாளி மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். அவர்களுக்குத் தேவையான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் கல்வி மாவட்டத்தில் 42 தேர்வு மையங்களும், பரமக்குடி கல்வி மாவட்டத்தில் 27 தேர்வு மையங்களும் ஆக மொத்தம் 69 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் நாட்களில் காலை 9.15 மணிக்கு தொடங்கி பிற்பகல் 12.00 மணி வரை நடைபெறும்.

மாணவ மாணவியர்கள் வினாத்தாளை படித்துபார்க்க 10 நிமிடங்களும் விடைத்தாள் விவரங்களை பூர்த்தி செய்ய 5 நிமிடங்களும் வழங்கப்படுகிறது. தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு செல்லிடப் பேசிகளை எடுத்துச்செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. தேர்வு எழுதும் மாணவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதி, தேர்வு அறைகளில் தடையில்லா மின்சார வசதி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வுகளில் முறைகேடுகள் ஏதும் நடக்கா வண்ணம் முதன்மைக்கல்வி அலுவலர், மாவட்டக்கல்வி அலுவலர் தலைமையில் 94 நிலைத்த கண்காணிக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை தனி வாகனங்கள் மூலம் ஆயுதம் தாங்கிய காவலர்களின் பாதுகாப்புடன் எடுத்துச் செல்ல 14 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் தேர்வு முடிந்தவுடன், தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் சிப்பங்கள், தொடர்புடைய ஆவணங்களைப் பெற்று வினாத்தாள் சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஜெயக்கண்ணு உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**